# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 42: 1-4,6-7,

திருப்பாடல் 29: 1,2. 3-4. 9-10,

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 10: 34-38,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 3: 13-17

## திருப்பலி முன்னுரை:

இறைமக்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவிற்குப்பின் வரும் காலத்தின் இறுதி நாளாக ஆண்டவரின் திருமுழுக்கு விழா அமைகிறது. இன்று திருமுழுக்குவிழாவைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் திருமுழுக்குவிழா வாழ்த்துகள். இயேசுவின் திருமுழுக்கில் நாம் கண்டறியும் வெளிப்பாடுகள் முதன்மையான மறையுண்மைகளை உள்ளடகியவை. திருமுழுக்கு யோவான் அறிவித்த இறைத்தூதைக் கேட்டு மனம்மாறிய மக்கள் யோர்தான் நதிக்கரைக்கு வந்து திருமுழுக்கு பெற்றுவந்தனர். மனிதருடைய பாவங்களுக்காகத் தன்னையே ஈகம் செய்யவந்த இயேசு தான் பாவம் செய்யா நிலையில் இருந்தும் மக்களுடைய பாவங்களைத் தான் ஏற்றுப் பலியாக இருப்பதால் தன் அருட்பணியின் தொடக்கமாக யோவானிடம் திருமுழுக்குப்பெற வந்தார். எனவே வானகத் தந்தையின் அன்புமக்களாக வாழ அவர் நம்பொருட்டு மகிழ இன்று நாம் கேட்ட இறைமொழிகளின் அடிப்படையில் வாழ முயல்வோம் அதனடிப்படையில்:

இயேசுவின் மொழிகளைக் கேட்போம்

சமத்துவம், நேர்மை, விடுதலை ஆகியவற்றை நம் வாழ்வாக்குவோம்.

இயேசு தரும் இந்த அருள் வாழ்வை அடித்தளமாகக் கொண்டு வாழ்வதுதான் மேலான நல வாழ்வாகும். அந்த வாழ்வைப்பெற இயேசுவுடன் என்றும் இணைந்திருக்கச் செய்வது இத் திருப்பலியாகும். இங்கு ஒப்புக்கொடுக்கப்படும் காணிக்கைப் பொருட்களுடன் நம்மையும் இணைத்து ஆண்டவருக்குக் காணிக்கையாக்குவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே!**

அருட்பணியை முழுமையாக நிறைவேற்ற நீர் நியமித்திருக்கும் எம் திருத் தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம் : அவர்கள் உம்மைப் போல தாழ்ச்சி, பொறுமை, இறைவனிடமிருந்து வந்த அழைப்பை முழுமையாக ஏற்று வாழும் நல் லுள்ளம், பணியார்வம், ஆகியவற்றைக் கொண்டு இயங்கவும் தூய ஆவியால் நிரப்பி, தீமைகளை முறியடிக்க வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மக்களுக்கு அமைதி அளித்து ஆசி வழங்கும் தந்தையே!**

மாட்சியையும், வலிமையையும் ஆண்டவருக்கு உரித்தாக்குங்கள். ஆண்டவரின் பெயருக்கேற்ற மாட்சியை அவருக்கு உரித்தாக்குங்கள்: தூய மாட்சி இலங்கும் ஆண்டவரை வழிபடுங்கள். என்னும் அழைப்பிற்கேற்ப வாழும் ஆற்றலை எமக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அஞ்சாதே என்று வாழ்த்தி புத்துயிர் தந்த எம் கனிவான தந்தையே எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் திருமுழுக்கின் வழியாக நாங்கள் பெற்றுக் கொண்ட அருங்கொடைகளை உணர்ந்த உம் வார்த்தைகளின்படி வாழ்க்கை நடத்தவும், வரும் தீமைகளிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுதலைப் பெற்றிட வேண்டிய வரத்தை எமக்கு அளித்திடுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நல்லாயனே இறைவா!**

நாங்கள் அனைவரும் எங்களின் வாழ்வில் கிறிஸ்துவை வெளிப்படுத்த தடையாக இருக்கும் கர்வம், ஆணவம், பொறாமை, போட்டி மனப்பான்மை போன்றவைகளை களைந்து கிறிஸ்துவுக்கு சான்று பகர்கிறவர்களாக திகழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு மன்னிப்பு அளித்து எமக்கு புதுவாழ்வை வாக்களித்த தந்தையே இறைவா!**

எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**கீழ்ப்படிதலின் மகிமையை உம் திருக்குடும்பத்தின் வழியாக உணர்த்திய எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களில் இறைமகன் வாழ்ந்துக் காட்டிய அதே வழியை, நாங்களும் கடைபிடித்து, எங்கள் குடும்பங்கள் கோவிலாய் ஒளிர்ந்திட, எமக்கு சுயநலமற்ற அன்பும், அடுத்திருப்பவருடன் நட்பு பாராட்டும் நல்ல உள்ளங்களையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பாதுகாப்பின் நாயகனே!**

எம் பங்கில் இருக்கின்ற நோயாளிகள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்து அவர்களை உமது அன்பில் திளைக்கவைக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.